ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1659/22 - 2010 ජූනි 24 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.06.24
*1659/22 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### *(262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (2) என்னும் பிரிவின் கீழ்*<br>காலி மாநகர சபையின் உறுப்பினரொருவரின் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்

*கட்சியின் உறுப்பினராக இல்லாதொழிந்துள்ளதால் காலி மாநகர சபையின் உறுப்பினரொருவரது பதவி, வெற்றிடமாகி யிருக்கின்றதாதலாலும் ;*

*அஜக சரத்சந்திர டி சரத்குணரத்ன எனும் உறுப்பினர் சேர்ந்திருந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெளிப்படுத்தப்படவேண்டிய அக்கட்சியைச் சேர்ந்தவரும் காலி மாநகர சபையின் உறுப்பினரொருவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு கட்டளைச் சட்டத்தின் கீழான தகுதியுடையவருமான ஆள் ஒருவரை பெயர் குறிப்பதற்கு மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 65 அ(2) ஆம் பிரிவின் கீழ் என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அத்தகைய வெற்றிடத்தை நிரப்புவதற்கு மேலே சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் கீழ், தகுதியுள்ள ஆளொருவராக திரு. நிமல் சந்ர ரணசிங்க என்பவரை பெயர் குறித்து நியமித்துள்ளாராதலாலும் ;*

*இப்போது காலி மாநகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் அந்தோனி பிமல் இந்திரஜித் த சில்வா ஆகிய நான், (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65அ (2) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு திரு. நிமல் சந்ர ரணசிங்க என்பவர், காலி மாநகர சபையின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*ஏ. பி. ஐ. த சில்வா,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*காலி மாநகர சபை.*

*தேர்தல்கள் அலுவலகம்,*
*காலி*
*2010, யூன் 15.*

*7 -296*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*